செ. கு. எண்:046 நாள்: 19.04.2017

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை - 19.4.2017

இந்தியாவின் வட கிழக்குப் பகுதியில் பாதுகாப்புப் பணியின் போது இராணுவ வாகனம் விபத்துக்குள்ளானதில், வாகனத்தை ஓட்டிச் சென்ற இந்திய இராணுவத்தின் 17 என்ஜினீயர் ரெஜிமென்டைச் சேர்ந்த ராணுவ வீரர், தூத்துக்குடி மாவட்டம், முள்ளக்காடு கிராமத்தைச் சேர்ந்த, திரு. குணசேகரன் என்பவரின் மகன் திரு. முத்து சந்தனகுமார் 18.4.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயரமும், மன வேதனையும் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் திரு.முத்து சந்தனகுமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த ராணுவ வீரர் திரு. முத்து சந்தனகுமார் அவர்களின் குடும்பத்திற்கு இருபது லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**